**TNTP170005292017**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை: **திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

2024–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01–ம் நாள் திங்கட்கிழமை

**இ.ம. எண். 02/23 in அ.வ.எண்.353/2017**

1. பிச்சையம்மாள்
2. ஜெயராமன் .......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

சிவலிங்கம் .........எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பு 13.06.2024 அன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.இளையராஜா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

1) இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:–</u>**

2.1) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கானது வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில், மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனதால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க இயவில்லை என்றும், அதனால் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், மனுதாரரை மீண்டும் விசாரணை செய்து சாட்சியமளிக்க அனுமதித்தால் தான் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய இயலும் எனபதால், மனுதாரரான வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>**

3.1) மனுதாரர்கள் தனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இவ்வெதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மனுதாரர் தனக்கும், தனது மனைவிக்கும் என்ன உடல் நிலைக்கோளாறு என்பது குறித்தும், என்ன சிகிச்சை மேற்கொண்டார்கள் என்பது குறித்தும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை. எதிர்மனுதாரர் அசல் வழக்கை தள்ளுபடி செய்யகோரி இ.ம.எண்.1/23 என்ற மனு தாக்கல் செய்த பின்னிட்டு, மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது என்பது அசல் வழக்கை தாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தாக்கல்

செய்யப்பட்ட இம்மனு என்பதால், இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தா? இல்லையா? என்பதாகும்.

**இருதரப்பும் கேட்கப்பட்டது.**

5) மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 1ம் மனுதாரர் வா.சா.1 ஆக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு வா.சா.1 ஆஜராகாததால், வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் இல்லாததால், வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு இ,ம.எண்.1/23 என்ற மனுவை எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்தததன் பின்னிட்டு, வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் விசாரிக்ககோரி மனுத்தாக்கல் செய்திருப்பதாக தெரியவருகிறது.

6) எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்களை விசாரித்து வழக்கை விரைந்து முடிக்க வாதிகள் தரப்பில் ஒத்துழைக்கும் பட்சத்தில் மனுவை அனுமதிக்கலாம் என ஒப்புதல் அளித்த நிலையிலும், வாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரணை செய்தால் தான் வாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய இயலும் என்பதாலும், வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய

உத்தரவிட்டு, மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7) முடிவாக,**

மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்/
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-**

இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-**

இல்லை.

/உண்மை நகல்/

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.